# இராணிப்பேட்டை நகராட்சி

2022ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27 ஆம் நாள் வியாழகிழமை காலை 10.00 மணி அளவில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண், மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 27.10.2022 | **<u>பொருள் எண்.1</u>**<br>மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், பிரிவு 24–B–24–H மற்றும் மாநகராட்சிகள் சட்டம் பிரிவுகளின் படியும் ,தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் விதிகள் 2022 –ன் படியும், வார்டு குழு மற்றும் பகுதி சபா குறித்து வெளியிடப்பட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை நிலை எண்கள் 92 மற்றும் 93 நாள்.24.06.2022 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.358 நாள்.24.06.2022 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு .</u>** அ. மன்றம் பதிவு செய்யலாம்.<br>ஆ. 1. மேற்கண்ட அரசாணைகள் மற்றும் அரசிதழ் ஆகியவற்றில் தெரிவித்த வழிமுறைகள் மற்றும் விதிமுறைகளின் அடிப்படையில் ஒவ்வொரு வார்டிலும் வார்டு குழு மற்றும் பகுதி சபா உருவாக்கப்பட வேண்டும்.<br>2 ஒவ்வொரு வார்டு குழுவிற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரமன்ற உறுப்பினர் தலைவர் ஆவார்.<br>3 தொடர்புடைய வார்டு வாக்களார் பட்டியலில் பதிவு பெற்ற 1 நபரை நகரமன்றம் பரிந்துரை செய்து அதனை நகராட்சி ஆணையாளர் கூராய்வு செய்து அவரிடம் உரிய விண்ணப்ப படிவம் பெற்று உறுப்பினராக நியமிக்கப்பட வேண்டும்.<br>4 உறுப்பினர்களாக நியமிக்கப்படுபவர்களின் விவரத்தை அடுத்து வரும் மன்ற கூட்டத்தில் பொருள் வைத்து | நகரமன்ற தீர்மானம் எண்,226<br>அலுவலகுறிப்பு அ முதல் உ வரை அங்கீகரிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | உறுதி செய்யப்பட வேண்டும். | |
| | 5 மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வார்டு குழு கூட்டம் கூட்டப்பட வேண்டும். | |
| | 6 ஒவ்வொரு வார்டிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள், குடிமை வசதிகள் ஆகியன குறித்து வார்டு குழு பரிந்துரை செய்யப்பட வேண்டும். | |
| | 7 ஒவ்வொரு வார்டு குழுவிற்கும் ஒரு நகராட்சி அலுவலர் செயலளாராக நியமனம் செய்யப்பட வேண்டும். | |
| | 8 குழு கூட்டம் நடைபெறும் நாள் இடம் தேதி குறித்தும் கூட்டப் பொருள் தயாரித்தல், வார்டுகளில் நடைபெறும் பணிகள் விவரம், மற்றும் மேம்பாடுகள் விவரம், போன்ற பணிகள் குறித்த விவரங்களை வார்டு குழுவிற்கு தெரிவித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டும். | |
| | 9 வரி, மற்றும் வரியில்லா இனங்களில் நிலுவை வைத்துள்ள நபர்களின் விவரங்களை வார்டு குழுவிற்கு தெரிவித்தல் வேண்டும் | |
| | இ 1 ஒவ்வொரு வார்டும் நான்கு பகுதி சபாக்களாக பிரிக்கப்பட வேண்டும். | |
| | 2 பிரிக்கப்படும் பகுதி சபாக்களுக்கான எல்லைகள் வரையறுக்கப்பட்டு மாவட்ட அரசிதழில் அறிவிப்பு செய்யப்பட வேண்டும். | |
| | 3 மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பகுதி சபா கூட்டம் கூட்டப்பட வேண்டும். | |
| | 4 பகுதி சபாக்களில் நடைபெறும் கூட்டத்திற்கு மக்கள் தொகை அடிப்படையில் 50 நபர்கள் முதல் 200 நபர்களுக்கு குறையாமல் கூட்டம் நடத்தப்பட | |

| | | |
|---|---|---|
| | வேண்டும்.<br>5 ஒவ்வொரு வார்டிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள், குடிமை வசதிகள் ஆகியன குறித்து சபா குழு பரிந்துரையால் செய்யப்பட வேண்டும்.<br>6 ஒவ்வொரு வார்டு குழுவிற்கும் ஒரு நகராட்சி அலுவலர் செயலளாராக நியமனம் செய்யப்பட வேண்டும்.<br>7 குழு கூட்டம் நடைபெறும் நாள் இடம் தேதி குறித்தும் கூட்டப் பொருள் தயாரித்தல், வார்டுகளில் நடைபெறும் பணிகள் விவரம், மற்றும் மேம்பாடுகள் விவரம், போன்ற பணிகள் குறித்த விவரங்களை வார்டு குழுவிற்கு தெரிவித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டும்.<br>8 வரி, மற்றும் வரியில்லா இனங்களில் நிலுவை வைத்துள்ள நபர்களின் விவரங்களை வார்டு குழுவிற்கு தெரிவித்தல் வேண்டும்<br><br>ஈ வார்டு குழு மற்றும் பகுதி சபா தொடர்பான கூட்டத்தில் கலந்து கொள்ளும் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு ஏதும் வழங்க வழிவகை இல்லை.<br>உ வார்டு குழு பகுதி சபா குறித்தான அரசிதழில் வெளியிடப்படுவதற்கான கட்டணம் மற்றும் இதர கட்டணங்களை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |

(ஒம்/ – க. சுஜாதாவினோத்)
நகரமன்றத் தலைவர்,
இராணிப்பேட்டை நகரமன்றம்.